BRAMPTON Service and Information Update

# பட்டாசு விற்பனையாளர்களுக்கான ஆன்லைன் பயிற்சி துவக்கம்

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 15, 2021) – இந்த ஆண்டில் பட்டாசு விற்பனை செய்யத் திட்டமிட்டிருக்கின்ற சில்லறை விற்பனையாளர்களுக்கு ஆன்லைன் பயிற்சி செயல்முறையை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் துவக்கியிருக்கிறது

இந்தப் பயிற்சி கட்டாயமாகும், மற்றும் விற்பனையாளர்களுக்கான உரிமம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக இந்தப் பயிற்சி எடுத்துக்கொள்வதும் கட்டாயமாகும்.

இந்தப் பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்ய, விற்பனையாளர்கள் ப்ராம்ப்ட்டன் தீத்தடுப்பு அமைப்பை 905.874.2740 என்ற எண்ணில் அல்லது fire.prevention@brampton.ca எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொண்டால் மேல்விபரம் மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.

கோவிட்-19 க்கான சுகாதார மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் அமலில் இருப்பதன் காரணமாக, இந்தப் பயிற்சியானது ஐந்து எளிய வழிகளில் ஆன்லைன் மூலமாக வழங்கப்படும்:

1. 2021 ஆண்டுக்கான பட்டாசு சில்லறை விற்பனையாளர் பாடவகுப்பிற்கான கட்டணத்தை செலுத்தி தீயணைப்பு ஆய்வுக்காக விண்ணப்பிக்கவும்
2. பட்டாசு சில்லறை விற்பனையாளர் பயிற்சி வீடியோவை பார்க்கவும்
3. பட்டாசு சில்லறை விற்பனையாளர் கேள்வித்தாளை நிரப்பவும்
4. உரிமத்திற்கான விண்ணப்பம் சமர்ப்பித்து கட்டணம் செலுத்தவும்.
   விபரங்களுக்கு licensing@brampton.ca ஐத் தொடர்பு கொள்ளவும்.
5. 2021ஆண்டுக்கான பட்டாசு சில்லறை விற்பனையாளர் உரிமத்தை சிட்டி ஹால்-க்கு வந்து நேரில் பெற்றுக்கொள்ளவும். சிட்டி ஹால்-க்கு வருகை தருவதற்கு வருகை முன்பதிவு அவசியம், மற்றும் இதனை www.brampton.ca/skiptheline இல் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

அனுமதிக்கப்படும் பட்டாசுகளின் வகைகள், இருப்பு வைப்பதற்கான விதிகள், காட்சிக்கு வைத்தல் மற்றும் விற்பனை செய்தல், வாடிக்கையாளர் அடையாள தேவைகள் மற்றும் மற்றும் பட்டாசு வாங்குவோருக்கு வினியோகம் செய்வதற்கான பாதுகாப்புக்கான வழிகாட்டுதல்கள் ஆகியவை பட்டாசு சில்லறை விற்பனையாளர் பயிற்சியில் அடங்கும்.

பல இடங்களில் கடை வைக்கவிருக்கும் சில்லறை விற்பனையாளர்கள், தங்கள் வகையில் கடைக்கு ஒருவராவது இந்தப் பயிற்சி வகுப்பை முடித்திருப்பது அவசியம். தீத்தடுப்பு ஆய்வு மேற்கொள்வதற்கான விண்ணப்பம் செய்ய இந்த காலக்கெடு நாட்களை விற்பனையாளர்கள் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்:

- வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 30, 2021 விக்டோரியா தின பட்டாசு வேடிக்கைகளுக்காக
- வெள்ளிக்கிழமை, ஜூன் 11, 2021 கனடா தின பட்டாசு வேடிக்கைகளுக்காக
- வெள்ளிக்கிழமை, அக்டோபர் 15, 2021 தீபாவளி தின பட்டாசு வேடிக்கைகளுக்காக
- வெள்ளிக்கிழமை, டிசம்பர் 10, 2021 for புத்தாண்டுதின பட்டாசு வேடிக்கைகளுக்காக

ப்ராம்ப்ட்டன் நகரின் பட்டாசுகளுக்கான உபசட்டமானது, குறைவான தூரமே சென்று வெடிக்கும் பட்டாசுகளை மட்டுமே விற்கவும் உபயோகிக்கவும் செய்ய அனுமதிக்கிறது (பற்ற வைத்தவுடன் 3 மீட்டர் அல்லது 10 அடி தூரமே பறந்து செல்லக்கூடியவை); இது ஆண்டுக்கு நான்கு முறை அனுமதிக்கப்படுகிறது – விக்டோரியா தினம், கனடா தினம், தீபாவளி, புத்தாண்டு தினம்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca